கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 2,442 கல்லூரிகள், இந்தியாவிலேயே அதிகமாக தமிழ்நாட்டில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். இதுவரையில் எந்த அரசாங்கமும் செய்யாத அளவிற்கு ஒட்டுமொத்தமாக இரண்டே ஆண்டுகளில் அதிகமான அரசுக் கல்லூரிகளைத் தொடங்கியது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்தான் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த வருடம்கூட மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் மயிலாடுதுறையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்கியிருக்கிறார்கள். ஆட்சி அமைந்த இரண்டே ஆண்டுகளில் 53 கல்லூரிகளைத் தந்து, தமிழகத்தில் அதிகமான மாணவர்கள் உயர் கல்வியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இதுபோன்ற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

நகரப் பகுதியில் கல்லூரி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். நிலம் கையகப்படுத்துகின்ற பணி முடிவு பெற்றால், அரசினுடைய கருத்தையும் ஏற்று, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, எதிர்காலத்தில் அரசு சிந்தித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 334, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

334—

முழுநேர நியாய விலைக் கடை

***32633—திரு. க. தினகரன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அப்பநாயக்கன்பட்டிபுதூரில் முழுநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) முழுநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். ஆனால், அப்பநாயக்கன்பட்டிபுதூரில் செயல்பட்டுவரும் பகுதிநேர அங்காடியில் 251 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. அரசு விதிமுறைகளின்படி நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் அப்பநாயக்கன்பட்டிபுதூரில் செயல்பட்டுவரும் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

திரு. க. தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டை ஒன்றியம், அப்பநாயக்கன்பட்டிபுதூரில் 251 குடும்ப அட்டைகள் கொண்ட பகுதிநேர நியாய விலைக் கடை இயங்கி வருகின்றது. இந்த நியாய விலைக் கடை மாதத்தில் நான்கு நாட்கள் மட்டுமே செயல்படுவதால், கூலி வேலைகளுக்குச் செல்லும் ஏழை மக்கள் பொருட்களை வாங்குவதற்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள். ஆகவே, அங்குள்ள ஏழை மக்களைக் கருத்தில்கொண்டு, விதிகளைத் தளர்த்தி, அங்கே முழுநேர நியாய விலைக் கடையை இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள நியாய விலைக் கடை, இளைஞர் மன்றத்தில்தான் இயங்கி வருகின்றது. எனவே, அதற்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டை ஒன்றியம், கலங்கல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கலங்கல் என்ற

முழுநேரக் கடை 1,279 குடும்ப அட்டைகளுடனும், அப்பநாயக்கன்பட்டியில் மற்றொரு முழுநேர நியாய விலைக் கடை 936 குடும்ப அட்டைகளுடனும், அப்பநாயக்கன்பட்டியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை 251 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன. அப்பநாயக்கன்பட்டியில் செயல்பட்டு வரும் பகுதிநேர நியாய விலைக் கடை அதன் தாய்க் கடையான கே.பி.0.80. அப்பநாயக்கன்பட்டியிலிருந்து 250 குடும்ப அட்டைகளுடன் 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் பகுதிநேர நியாய விலைக் கடையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பகுதிநேர நியாய விலைக் கடையை மீண்டும் முழுநேர நியாய விலைக் கடையாக அமைக்க அரசு விதிமுறைகள் பூர்த்தியாகவில்லை. 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அன்றைக்கு 250 குடும்ப அட்டைகளோடு தொடங்கப்பட்ட அந்தக் கடை, இன்றைக்கு 251 ஆக, அதாவது, ஒரேயொரு குடும்ப அட்டைதான் அதிகரித்திருக்கிறது. எனவே, அரசு விதிமுறைகள் பூர்த்தியாகவில்லை என்பதாலும், பிரத்யேகக் காரணங்கள் ஏதுமில்லை என்பதாலும், இங்கு முழுநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

திரு. க. தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட சாமலாபுரம் பேரூராட்சியில் பரமசிவம்பாளையத்தில் முழுநேர நியாய விலைக் கடை 750 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகின்றது. அதையொட்டி உள்ள பெருமாம்பாளையத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கிருந்து 2 கி.மீ. தூரம் நடந்து வந்து பொருட்களை வாங்கவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, பரமசிவம்பாளையத்தில் 750 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகின்ற முழுநேர நியாய விலைக் கடையைப் பிரித்து, 200 குடும்ப அட்டைகளுடன் பெருமாம்பாளையத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், கருமத்தம்பட்டியில் 1,300 குடும்ப அட்டைகளுடன் முழுநேர நியாய விலைக் கடை இயங்கி

வருகின்றது. கருமத்தம்பட்டிபுதூரில் 200 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. 2 கி.மீ. தூரம் நடந்து கருமத்தம்பட்டிக்குச் சென்றுதான் பொருட்களை வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இதைக் கருத்தில்கொண்டு, கருமத்தம்பட்டிபுதூரில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதிக்குட்பட்ட எல்லா பகுதிகளிலும் ஒரு சில இடங்களில் நியாய விலைக் கடை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், நீங்கள் ஒரு கேள்வியைக் கேளுங்கள். ஏற்கெனவே, இரண்டு கேள்விகளைக் கேட்டு விட்டீர்கள். அதன்பிறகு, தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கிறீர்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, அப்பநாயக்கன்பட்டிபுதூரில் பகுதிநேர நியாய விலைக் கடைக்கான கட்டடம், தனியார் கட்டடங்களில் இயங்கி வருவதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியினை ஒதுக்கீடு செய்வார்களேயானால், முன்னுரிமை அடிப்படையில் உடனடியாகக் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கடைகளைக் குறிப்பிட்டார்கள். அந்தக் கடைகளை பகுதிநேர கடைகளாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆய்வின் அடிப்படையில், தேவைக்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தற்போது 1,101 முழுநேர நியாய விலைக் கடைகளையும், 267 பகுதிநேர நியாய விலைக் கடைகளையும் சேர்த்து மொத்தம் 1,368 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த மூன்றாண்டு காலத்தில் 29 முழுநேர அங்காடிகளும், 42 பகுதிநேர அங்காடிகளும், ஆக மொத்தம் 71 நியாய விலைக் கடைகளைப் பிரித்துக் கொடுத்தார்கள் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)